TAMIL ... LIBRARY
6 NOV 1972
MADRAS

தமிழ் நாடு சட்டப் பேரவை.

வெள்ளிக்கிழமை, 1972 ஆகஸ்ட் 25.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினுக்கள் விடைகள்.

வெள்ளிக் குறியிட்ட வினுக்கள்.

ஈ.ஐ.டி. பாரி நிறுவனம் கொள்முதல் செய்யும் நெல்.

*1 குறுகிய கால வினு: திரு. க. நாகராஜன் } திரு. கே. டி. கே. தங்கமணி: } மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) ஈ.ஐ.டி. பாரி நிறுவனம் இம்மாநிலத்தில் பயன்படுத்துவதற்காக விதை நெல்லுக்கான நெல் கொள்முதல் செய்கிறதா ?

(இ) அந்த நெல்லில் பெரும் பகுதி அண்டை மாநிலங்களிலுள்ள அதன் கிளைகளுக்கு அனுப்பப்படுவது உண்மையா ?

(உ) ஆமெனில், அதைத் தடுக்க மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(ஆ) 1968–69, 1969–70, ஆண்டுகளில் பாரி நிறுவனம் கொள்முதல் செய்த மொத்த விதைகளை தமிழ் நாட்டிலேயே விற்பனை செய்தனர். 1970–71-ம் ஆண்டில் தமிழ் நாட்டில் 294 டன் விதைகளும், பிற மாநிலங்களில் 23 டன் விதைகளும் விற்கப்பட்டன. 1971–72-ம் ஆண்டில் தமிழ் நாட்டில் 287 டன் விதைகளும், பிற மாநிலங்களில் 635 டன் விதைகளும் விற்கப்பட்டன. 1972–73-ம் ஆண்டு துவக்கத்தில் கையிருப்பு 458 டன் விதைகளாகும். மொத்தக் கையிருப்பு விதைகளை இம்மாநிலத்தில் வழங்குவதற்கென்று ஒதுக்கப்பட்டிருக்கிறது.

(இ) தகுதிசான்றுள்ள விதைகளை இந்தியத் துணைக் கண்டத்தில் எந்தப் பகுதிக்கும் எடுத்துச் செல்வது பற்றித் தடை ஏதும் இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : சென்ற ஆண்டு பாரி கம்பெனியாருக்குக் கொடுத்திருந்த நெல் விதைகளில் பெரும் பகுதி வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. அம்மாதிரி, இவ்வாண்டு 458 டன் இருக்கிறதென்றால், அதில் பெரும் பகுதியைத் தமிழ் நாட்டில் உபயோகப்படுத்துவதற்கு அரசு ஆணை பிறப்பிக்குமா ?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : இந்திய அரசின் ஆணைப்படி சர்ட்டிஃபைட் ஸீட்ஸ் எடுத்துக்கொண்டுபோகத் தடை விதிக்க முடியாது. 1971–72-ஆம் ஆண்டில் 287 டன் தமிழ் நாட்டில் விற்றிருக்கிறார்கள். வெளி மாநிலங்களுக்கு 635 டன் விதைகளை அனுப்பியிருக்கிறார்கள். 1972–73-ம் ஆண்டு துவக்கத்தில், சென்ற ஆண்டு "கேரிஓவர்" ஆக 458 டன் விதைகள் வைத்திருக்கிறார்கள். நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல, இந்திய அரசின் ஆணைப்படி இந்த "சர்ட்டிஃபைட்" ஸீட்களை அனுப்ப நாம் ஒன்றும் தடை விதிக்க முடியாது.

திரு க. நாகராஜன் : இவ்வாறு அனுப்பப்படுகின்ற நெல் விதைகள் உணவுக்காக அதிக விலைக்கு விற்கப்படுகிறதா அல்லது விதைக்காகவே பயன்படுத்தப்படுகின்றனவா என்று அறிந்து கொள்வதற்கு வாய்ப்பு இல்லை. எஞ்சியிருக்கும் விதைகளை வெளி மாநிலங்களில் விற்பதற்கு முன்னால், இந்த அரசின் ஒப்புதலைப் பெற்றுதான் வெளி மாநிலங்களில் விற்கவேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்தும் திட்டம் ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : இந்த மாநிலத்தில்தான் விற்கவேண்டும் என்று நாம் வலியுறுத்த முடியாது. இந்த விதை நெல்லை உணவுக்காகப் பயன்படுத்த முடியாது. ஏனென்றால், இது விதைக்காகவே பக்குவப்படுத்தப்படுகிற (ப்ராஸஸ் செய்யப்படுகிற) காரணத்தால் "இட் ஈஸ் அன்ஃபிட் ஃபார் ஹியூமன் கன்ஸம்ஷன்" என்று சொல்லப்படுகிறது. இதை விதைக்காகத்தான் பயன்படுத்த முடியும், உணவுக்காகப் பயன்படுத்த முடியாது என்று தான் எனக்கு இருக்கும் தகவலிலிருந்து தெரிகிறது.

திரு. நா. வீராசாமி : இதுபோன்ற விதை நெல் நம்முடைய மாநிலத்திலிருந்து மற்ற மாநிலங்களுக்கு எடுத்துச் செல்லப்படுவதைப் போல, மற்ற மாநிலங்களிலிருந்து நம்முடைய மாநிலத்திற்கு வருகின்றதா ? அதை யார் இங்கே கொண்டுவந்து விற்கிறார்கள் என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தனிக் கேள்வி போட்டால் தகவல் சேகரித்து அளிக்கிறேன்.

Institute of Film Technology

*** 326 Q—Thiru N. DENNIS : Will the Hon. the Chief Minister be pleased to state the details of the facilities available to the students of the Institute of Film Technology, Adyar, Madras to prosecute their studies ?**